25.03.2022

அசல் வழக்கு எண். 100/2018

வா.சா.1 பாதர்வெள்ளை பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

எங்களது சங்கம் இந்து மஸ்தூர் சபாவுடன் இணைக்கப்பட்டது என்றால் சரிதான். இது அகில இந்தியா தொடர்புடைய சங்கம் என்றால் சரிதான். நாங்கள் அகில இந்திய இந்து மஸ்தூர் சபா விதிகளின்படிதான் நாங்கள் நடந்து கொள்வோமா என்றால எங்களது சங்கத்திற்கு விதிகள் உள்ளது அதன்படிதான் நடந்து கொள்வோம். இந்து மஸ்தூர் சபா சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் நாங்கள் அதனுடன் இணைந்தோம் என்றால் அவர்களது விதிமுறைகளுக்கும் எங்களுக்கும் சம்மந்தமில்லை. மீண்டும் இந்து மஸ்தூர் சபா சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் நாங்கள் அதனுடன் இணைந்தோம் என்றால் சரிதான். எங்களது சங்கத்தில் என்னென் சொத்துக்கள் வைத்துள்ளோம், என்னென்ன சொத்துக்கள் வாங்கினோம் என்று நாங்கள் அகில இந்திய இந்து மஸ்தூர் சபாவில் காட்டமாட்டோம். இந்து மஸ்தூர் சபா பொதுக்குழு, மாநாடுகளில் எங்களது சங்கம் கலந்து கொள்ளும் என்றால் சரிதான். இந்து மஸ்தூர் சபாவில் இணைப்பு உண்டு ஆனால் சொத்துக்களை பொறுத்து எங்களது சங்கம் எடுப்பதுதான் முடிவு என்றால் சரிதான். நாங்கள் எப்படி இந்து மஸ்தூர் சபாவில் இணைகிறோமோ அதேமாதிரி தான் வெவ்வேறு கிளைச் சங்கங்கள் எங்களது சங்கத்தில் இணைகிறது என்றால் சரிதான். ஒவ்வொரு மில்லில் இருக்கிற கிளைச்சங்கங்களும் அவர்களுக்கு தனித்தனியாக சொத்துக்கள் வாங்க உரிமையுண்டு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 சீதாலெட்சுமி மில்லின் பெயரில் கிரையம் பெறப்பட்டதா அல்லது மதுரை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்தின் பெயரில் அதன் தலைவர் கிரையம் பெறப்பட்டதா என்றால் மதுரை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்தின் பெயரில் அதன் தலைவர் ராமையா மற்றும் செயலாளர் ராமச்சந்திரன் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. வா.சா.ஆ.2 ல் சீதாலெட்சுமி மில்லின் சங்க கிளைக்காக வாங்கப்பட்டது என்ற வாசகம் உள்ளதா என்றால் உள்ளது. தாவாச் சொத்து சீதாலெட்சுமி மில்லில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலனுக்காகவும் சங்க நடவடிக்கைக்காகவும்

வாங்கப்பட்டது என்றால் சரிதான் எங்களது சங்கத்தின் பெயரால் வாங்கப்பட்டது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் பிரதிவாதி ராமச்சந்திரன் பெயரில் வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர் செயலாளர் என்ற முறையில் அவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சீதாலெட்சுமி மில் கிளையை பொறுத்து அவர்தான் செயலாளர் ராமச்சந்திரன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் ராமச்சந்திரன் கிரையதாரராக வருவதற்கு காரணம் ராமச்சந்திரன் அங்கு தொழிலாளியாக இருந்ததாலும் மற்ற தொழிலாளிகளின் நலுனுக்காகவும் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். தொழிலாளர்களின் நலனுக்காக கிரையம் வாங்க பணம் கொடுத்தது ராமச்சந்திரன் என்றால் சரியல்ல. மதுரை ஜில்லா மில் தொழிலாளர்கள் சங்கத்திற்காக ஒரு சொத்தை வாங்கவும் விற்பனையும் செய்யும் சமயத்தில் சங்கத்தில் தீர்மானம் இயற்றிதான் வாங்கவும் விற்கவும் செய்வோம் என்றால் சரிதான். சங்க செயற்குழு நபர்களை கூட்டம் கூட்டி அங்கு முடிவு எடுக்கப்படும் என்றால் சரிதான். சொத்து வாங்குவதற்கு சங்கத்தில் கூட்டம் கூட்டி எவ்வளவு பணம் ஒதுக்க வேண்டும் என்று தீர்மானம் போடப்படும் என்றால் சரிதான். அந்த தீர்மானங்களை எங்களது சங்க மினிட் புக்கில் எழுதப்பட்டு அன்று கூட்டத்தில் வந்தவர்களிடம் கையெழுத்து வாங்கி வைக்கப்படும் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்தை கிரையம் பெறுவதற்கு எங்களது சங்கத்தின் செயற்குழு கூட்டம் கூட்டி பணம் ஒதுக்கப்பட்டதற்கு தீர்மானம் ஏற்பட்டதற்கு எழுத்துப் பூர்வ ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் வா.சா.ஆ.2 ல் கண்ட சொத்தை வாங்க தீர்மானம் ஏற்பட்டு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கிரையம் வாங்கப்பட்டது என எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ல் கண்ட சொத்தை மதுரை ஜில்லா மில் தொழிலாளர்கள் சங்கத்திற்காக வாங்கவில்லை என்பதால்தான் மேற்படி சொல்லப்பட்டுள்ள தீர்மானம் எதுவும் இயற்றப்பட்டதா என்பது பொறுத்து எனது பிராதிலும் சொல்லப்படவில்லை என்றும், அது சம்மந்தமான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

எங்களது சங்கம் சம்மந்தமாக என்ன செலவு செய்தாலும் அது பொறுத்து எங்களது பேரேடுகளில் குறிப்பிட்டு ஆடிட்டரிடம் கணக்கு வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். அதேபோல் தொழிலாளர்கள் சம்மந்தமாகவும் வரவு செலவு கணக்குகளை சங்க பதிவாளரிடம் கணக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். எங்களது மதுரை ஜில்லா மில் தொழிலாளர் சங்கம் தான் தாவா சொத்தை கிரையம் பெற பணம் கொடுக்கப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் இல்லாததால் எனது வாய்மொழி சாட்சியத்தை மட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறேன். வா.சா.ஆ.2 ன் அசல் கிரைய பத்திரம் 1983 ம் வருடம் பிரதிவாதி ராமச்சந்திரன் வாங்கி சென்றுவிட்டார் என்றால் சரிதான். நான் நேரடியாக பிரதிவாதியிடம் வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தை கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சங்கத்தில 1979 ல் தான் உறுப்பினராக சேர்ந்தேன். தாவா சொத்தை வாங்கியதில் இருந்து தாவா சொத்தில் உள்ள கட்டிடங்கள் மற்றும் சீதாலெட்சுமி மில்லை பிரதிவாதி ராமச்சந்திரனும் அங்கிருந்த தொழிலாளர்களும் அனுபவம் செய்து தொழிற்சங்க பணிகளை செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. கிரையம் வாங்கியதில் இருந்து தாவா சொத்து கட்டிடத்தில் சீதாலெட்சுமி மில் சங்கம் நடந்ததா என்றால் எங்களது மேற்பார்வையில் நடந்தது. ராமச்சந்திரன் மற்றும் சீதாலெட்சுமி மில் தொழிலாளர்கள் அனுபவத்தில்தான் மேற்படி சங்கம் தொடர்ந்து நடைபெற்ற வந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆக 22.04.1984 ம் தேதி ராமையா நாராயணன் இருவரும் ராமச்சந்திரனிடம் தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தை ஒப்படைக்க வேண்டும் என்று கடிதம் அனுப்பப்பட்டது என்றால் கிரையப்பத்திரம் மற்றும் கட்டிடத்தை ஒப்படைக்க கடிதம் அனுப்பப்பட்டது. வா.சா.ஆ.6 கடிதம் 22.04.1984 ம் தேதி அனுப்பப்படும் போது சங்கத்தில் நான் ஒரு சாதாரான உறுப்பினர் என்றால் நான் மத்திய நிர்வாக குழு உறுப்பினராக இருந்தேன். 1984 ம் ஆண்டில் இருந்து இந்த வழக்கு தாக்கல் செய்த தேதிவரை கட்டிடம் மற்றும் பத்திரத்தை ஒப்படைக்க கேட்டு இதுவரை வழக்கு எதுவும் தாக்கல்

செய்துள்ளோமா என்றால் இந்த வழக்கு தவிர வேறு வழக்கு ராமச்சந்திரன் மீது தாக்கல் செய்யவில்லை. 1984 முதல் 2017 வரை எங்கள் சங்கத்தில் பல பொதுக்குழு, செயற்குழு கூட்டம் கூட்டப்பட்டு பல தீர்மானங்கள் இயற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 34 வருட இடைவெளியில் ராமச்சந்திரனிடம் இருந்து சொத்தையும், கட்டிடத்தையும் திரும்ப பெற எந்ததீர்மானமும் இயற்றப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நான் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது சீதாலெட்சுமி மில் கிளைக்காக கிரையம் பெறப்பட்ட தாவா சொத்தின் மேற்கோப்பு அமைப்பு என்றால் வழக்கிற்கு பின்னிட்டு தற்பொழுது போடப்பட்டுள்ளது அதன் புகைப்படம்தான் இது. அந்த புகைப்படம் (2 எண்ணிக்கை) பி.வா.சா.ஆ.1. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள அமைப்பானது 20 வருடங்களாக இருக்கும் அமைப்பு என்றால் சரியல்ல. அது சீதாலெட்சுமி மில் ராமச்சந்திரன் உட்பட மில் தொழிலாளர்கள் சேர்ந்த அமைத்த மேற்கோப்பு என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் உள்ள மேற்கோப்பை போடக்கூடாது என்று சொல்லி நான் ஆட்சேபனை எதுவும் செய்து, காவல்துறையில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை, வழக்கு தாக்கல் செய்துள்ளதால் கொடுக்கவில்லை. எனது பிராதில் அவ்வாறு மேற்கோப்பு அமைத்த விபரம் சொல்லியுள்ளேன். பி.வா.சா.ஆ.1 புகைப்படத்தில் உள்ள மேற்கோப்பு அமைப்பு 20 வருடமாக இருப்பதால்தான் அதைப்பொறுத்து போலீஸ் புகாரோ தாவா வழக்கிலோ ஆட்சேபனை செய்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும் அதைப்பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு பட்டா கேட்டு நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் எடுத்தேன். 1981ம் வருடம் முதல் 2017 வரை எங்களது சங்கம் இந்த தாவா சொத்தை பொறுத்து பட்டா கேட்டு மனு செய்யவில்லை 2018ல் தான் மனு செய்தோம். வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு என்றால் சரிதான். ராமச்சந்திரனும் அவர்கள் மில் பெயரில் பட்டா கேட்டு மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்தவிசாரனை திருமங்கலம் ஆர்.டி.ஓவிடம்தான் விசாரனை நடந்தது. அந்த

விசாரணையில் பிரேமலதா என்பவரும் தாவா சொத்தை பொறுத்து தனது பெயரில் பட்டா இருப்பதாக மனு தாக்கல் செய்தார் என்றால் பிரேமலதா யார் என்றே தெரியாது. தாவா சொத்து நான்குமால் யாருடைய சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2ல் சர்வே எண். 221/2 மொத்த விஸ்தீர்ணம் 5 ஏக்கர் 66 செண்ட் என்றால் சரிதான். அதில் பிளாட் எண். 65 என்று குறிப்பிடப்பட்டுள்ளது தான் தாவா சொத்து என்றால் சரிதான். பிளாட் எண். 65ல் இந்த தாவா சொத்து எந்த பகுதியில் உள்ளது என்றால் மேற்குப் பகுதியில் உள்ளது. கிழக்குப்பகுதி யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் நான்குமாலாக கிழக்கே காந்தியம்மாள் மனைக்கும் மேற்கே என குறிப்பிட்டுள்ளேன் என்றால் கிரையப்பத்திரத்தில் உள்ளதை சொல்லியுள்ளேன். தாவா வழக்கு தாக்கல் செய்யும்போது கிழக்குப்பக்கம் உள்ள சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். திருமங்கலம் ஆர்.டிஓவிடம் இருந்து விசாரனைக்கு எனக்கு சம்மன் வந்தது. அந்த விசாரனையில் கோட்டாட்சியர் ஒரு உத்தரவு வழங்கினார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது அந்த உத்தரவு நகல் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2. இது ஜெராக்ஸ் நகல் என வாதி தரப்பில் குறியீடு செய்யக்கூடாது என ஆட்சேபனை செய்யப்பட்டது. இந்த ஆட்சேபனை பொறுத்து தீர்ப்பின் பொழுது தீர்மானிக்கப்படும். ஆர்.டி.ஓ நிலுவையில் உள்ள இந்த அசல் வழக்கை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இந்த விசாரனையில் பிரேமலதாவும் கலந்து கொண்டதாக ஆர்.டி.ஓ.உத்தரவில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இந்த உத்தரவு நகல் ஆர்.டி.ஓ.வால் எனக்கும், பிரேமலதாவிற்கும், ராமச்சந்திரனுக்கும் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். இந்த ஆர்.டிஓ.நகல் எனக்கு அனுப்பப்பட்டு நானும் அதை பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். 1983ல் சீதாலெட்சுமி மில் தொழிலாளர்கள் அனைவரும் சேர்ந்து கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கம் என தனி சங்கம் ஏற்படுத்தப்பட்டது என்றால் எங்களது சங்கத்தில் இருந்து நீக்கப்பட்ட பின்னிட்டு அவர்கள் கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கம்

புதுசங்கம் ஆரம்பித்தனர். தாவாச் சொத்தில் பிரேமலதா உண்மைக்கு புறம்பாக வாங்கிய பட்டாவை ரத்து செய்ய சொல்லிதான் ராமச்சந்திரன் நடவடிக்கை எடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 ல் சொல்லப்பட்ட பிரேமலதா என்ன கோரிக்கை வைத்திருந்தார் என்றால் பிரேமலதா யார் என்றே எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 விசாரணையில் வழக்கறிஞருடன் ஆஜரானேன் என்றால் சரிதான். ஆர்.டி.ஓ. விசாரணையில் நான் தாக்கல் செய்த மனு அல்லது பதிலுரை நகல் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. நான் கொடுத்த மனுவில் மதுரை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்திற்கு பட்டா கொடுக்க வேண்டி கேட்கப்பட்டது. அந்த மனுவில் வேறு யாருக்கும் பட்டா மாற்றம் செய்யக்கூடாது என்று ஆட்சேபனை செய்தேனா என்றால் ராமச்சந்திரனுக்கு கொடுக்கக்கூடாது என்று ஆட்சேபனை செய்தேன் பிரேமலதாவிற்கு கொடுக்கக்கூடாது என ஆட்சேபனை செய்யவில்லை. பி.வா.சா.ஆ.2 விசாரணைக்கு குறிப்பாணை எனக்கு வழங்கப்பட்ட பொழுது அதில் பிரேமலதா பெயரும் இருந்தது என்றால் சரிதான். அப்பொழுது பிரேமலதாவிற்கும் தாவா சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என ஆட்சேபனை செய்தேனா என்றால் இல்லை. தாவா வழக்குச் சொத்தில் உள்ள கட்டிட அமைப்பில் தொடர்ந்து கோவை ஜில்லா மில் தொழிலாளர்கள் சங்கம் பிரதிவாதி ராமச்சந்திரனாலும், அதன் தொழிலாளர்களாலும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. கோவை ஜில்லா மில் தொழிலாளர்கள் சங்கம் என்பது மதுரை மாவட்ட நூற்பு நெசவுத் தொழிலாளர்கள் சங்கம் என தற்பொழுது மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோவை ஜில்லா மில் தொழிலாளர்கள் சங்கமும் இந்து மஸ்தூர் சபாவில் இணைக்கப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் பெயர் மாற்றம் செய்த பின்னிட்டு மதுரை மாவட்ட நூற்பு நெசவுத் தொழிலாளர்கள் சங்கமும் இந்து மஸ்தூர் சபாவுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் சங்கமும், பிரதிவாதி ராமச்சந்திரனின் மதுரை மாவட்ட நூற்பு நெசவுத் தொழிலாளர்கள் சங்கமும் இந்து மஸ்தூர் சபாவுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சீதாலெட்சுமி மில் 2010 ல் தான் மூடப்பட்டது என்றால் சரிதான். தாவா

சொத்தில் உள்ள மேற்கோப்பிற்கு வீட்டு வரி போடப்பட்டு சங்கத்தின் சார்பில் ராமச்சந்திரனால் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து உள்ள பகுதி தனக்கன்குளம் ஊராட்சிக்கு உட்பட்ட சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து இருக்கும் பகுதிக்கு பெயர் சௌபாக்கியா நகர் என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ரசீதுகள் தாவா சொத்திற்கு செலுத்தப்படும் வரி ரசீதுகள் (4 எண்ணிக்கை) என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.3. 1981 லிருந்து கிரையம் பெற்ற நாளில் இருந்து தாவா சொத்து உள்ள வீட்டிற்கு எங்கள் சங்கத்தின் சார்பில் வீட்டு வரி எதுவும் செலுத்தப்படவில்லை என்றால் சரிதான். சட்டப்படி சங்க நடவடிக்கைகள் எதுவும் எடுக்க வேண்டும் என்றால் முறைப்படியான செயற்குழு தீர்மானத்தின் அடிப்படையில்தான் செயல்படுத்த வேண்டும் என்றால் சரிதான். எங்களது பிராதில் ராமச்சந்திரன் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததாக நாங்கள் குறிப்பிட்டுள்ள தேதி 27.02.2018 என்றால் சரிதான். ஆனால் 27.02.2018 ம் தேதியில் அவர் ஆக்கிரமிப்பு செய்ததாக அதற்கு பின்னிட்டுதான் அவர் மீது வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என சங்கத்தில் தீர்மானம் போடப்பட்டதா என்றால் இல்லை, ஜனவரி மாதமே தீர்மானம் ஏற்படுத்தி விட்டோம். வா.சா.ஆ.9 ஆவணத்தில் 26.01.2018 ல் 7 வது தீர்மானமாக ராமச்சந்திரன் பெயரில் நடவடிக்கை எடுக்க எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய தேதியில் 7 தீர்மானங்கள் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆறு தீர்மானங்களுக்கு கீழே அந்த கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கையெழுத்து செய்துள்ளனர் என்றால் 7 வது தீர்மானத்திற்கு கீழ்தான் சங்க தலைவர் கையெழுத்து செய்துள்ளார். நான் சொல்வது தவறு என்றும் 6 தீர்மானங்கள் நிறைவேற்றி அதற்கு கீழ்தான் கூட்டத்தில் கலந்து கொண்ட செயற்குழு உறுப்பினர்கள் கையெழுத்து செய்துள்ளனர் என்றும் 7 வது ஒரு தீர்மானம் பிற்சேர்க்கையாக சேர்க்கப்பட்டு கூட்டத்தலைவரால் மட்டும் கையெழுத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ராமச்சந்திரனுக்கு எதிராக எழுதப்பட்டுள்ள 7 வது தீர்மானத்திற்கு கீழ் அன்றைய தேதியில் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கையெழுத்து செய்யப்பட்டுள்ளதா என்றால்

செய்யப்படவில்லை. 26.01.2018 ல் போடப்பட்ட 1 முதல் 6 தீர்மானங்களுக்கு கீழ் மற்றும் அன்றைய தேதியில் கலந்து கொண்ட செயற்குழு உறுப்பினர்கள் கையெழுத்து காணப்படுகிறதா என்றால் இல்லை. வா.சா.ஆ.9 தீர்மானம் என்பது செயற்குழுவில் வைக்கப்பட்டு முடிவு எடுத்ததாக சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றும், எந்தவிதமான செயற்குழு கூட்டமே இல்லாமல் நானும தலைவரும் சேர்ந்த தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அந்த தீர்மானம் சட்டப்படி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எந்தவித உரிமையும் கொடுக்காது என்றால் சரியல்ல. நானும் தலைவரும் பின்யோசனை செய்து தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 9 ஆவணத்தில் 11 வது பக்கத்தில் 24.03.2018 ல் போடப்பட்ட செயற்குழு கூட்டத்தில் கூட்ட ஆரம்பத்திலேயே யார் யார் கலந்து கொண்டார்கள் என்பவர்கள் பெயர் எழுதப்பட்டு கையெழுத்து பெறப்பட்ட பின்னிட்டுதான் கூட்டமே ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்தின் அடிப்படையில் நாங்கள் தாக்கல் செய்த தாவா வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எங்கள் சங்கத்திற்கு தாவா சொத்து மற்றும் அதில் உள்ள மேற்கோப்பு அமைப்புகள் எங்களுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும் அதை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர எங்கள் சங்கத்திற்கு சட்டப்படி எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மேலும் தொழிலாளி என்ற முறையிலும், மதுரை மாவட்ட நூர்பு நெசவு தொழிலாளர் சங்க பொறுப்பாளர் என்ற முறையில் மற்ற சக தொழிலாளர்களோடு தாவா சொத்தில் 20 வருடங்களுக்கு மேலாக இருக்கும் மேற்கோப்பு அமைப்பில் தொடர்ந்து பிரதிவாதி ராமச்சந்திரன் மற்றும் சக தொழிலாளர்கள் சுவாதீனத்தில் இருந்து தொழிற்சங்கம் நடத்தி வருவதை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து பிரதிவாதி ராமச்சந்திரன் மற்றும் தொழிற்சங்க தொழிலாளர்கள் அனுபவத்தில் உள்ளதை அறிந்தும் நாங்கள் தாவா சொத்து குறித்து தாவாச் சொத்தையும் அதில் உள்ள மேற்கோப்பு அமைப்பையும் பொறுத்து நீதிமன்றம் எங்களிடம் ஒப்படைக்க

வேண்டும் என்று வழக்கு நாங்கள் தாக்கல் செய்யாமல் அந்த சட்ட நிலையை வேண்டுமென்றே புறக்கணித்துள்ளோம் என்றால் சரியல்ல. மேலும், தாவா சொத்து மற்றும் அதில் உள்ள மேற்கோப்பு மற்றும் கட்டிட அமைப்பு ஆகியவைகள் தொடர்ந்து தொழிலாளர்களாகிய ராமச்சந்திரன் மற்றும் அவரோடு சேர்ந்த மதுரை மாவட்ட நூர்பு நெசவு தொழிலாளர்கள் சங்க உறுப்பினர்களுக்கு பாத்தியப்பட்டும், தொடர்ந்து 1981ல் இருந்து இன்றைய தேதிவரை அவர்கள் அனுபவத்தில் இருப்பதால் அது குறித்து நாங்கள் இந்த வழக்கினை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்வதற்கு எந்த அறுகதையும் இல்லை என்றால் சரியல்ல. ஆர்.டி.ஓ.விசாரனையில் பிரேமலதா தாவா சொத்தில் தனக்கு கூடுதலாக விஸ்தீரணம் உள்ளது என பட்டா பெற்றதை ஆட்சேபனை செய்துதான ராமச்சந்திரன் மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் அந்த விசாரனையில் பிரேமலதா சார்பாக ஒரு வழக்கறிஞர் ஆஜரானார் ஆனால் ராமச்சந்திரன் எதற்காக மனு தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியாது. பிரேமலதா, அவரது கணவர் அனைவரும் எங்களது சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் எங்களுக்கு உறவினர்கள் என்பதால் அவர்கள் தாக்கல் செய்த மனுவில் நாங்கள் குறிக்கீடு செய்தோம் என்றும் அவருக்கு ஆதரவாக நாங்கள் செயல்பட்டோம் என்றால் சரியல்ல. அந்த ஆர்.டி.ஓ.வழக்கில் சர்வேயர் அறிக்கை தாக்கல் செய்து அதில் பிரேமலதா பெற்ற பட்டா தவறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எவ்வாறு இந்து மஸ்தூர் சபா அவர்கள் எங்களது சங்க சொத்து விற்பனை வாங்குவது சம்மந்தமாக தலையீடு செய்ய முடியாதோ அதேபோல்தான் எங்களது கிளைசங்கமான சீதாலெட்சுமி மில் சங்கத்தின் சொத்து வாங்குவது விற்பது சம்மந்தமாக நாங்கள் தலையீடு செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் பொறுப்பேற்ற பின்னிட்டு எங்களது சங்க சொத்துக்கள் சிலவற்றை சங்க விதிகளின்படி விற்பனையும் செய்துள்ளோம், வாங்கவும் செய்துள்ளோம். ராமச்சந்திரன் தாக்கல் செய்த எதிருரையில் 12 வது பாராவை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். அவை அனைத்தும் தவறான செய்திகள். 12 வது பாராவில்

சொல்லப்பட்ட சொத்துக்களை நாங்கள் சங்க விதிகளின் படி விற்பனை செய்துவிட்டு விதிகளின்படி அதை கணக்கு வழக்கும் ஒப்படைத்தள்ளோம். தாவா சொத்து மற்றும் அதில் உள்ள கட்டிடத்தை பிரேமலதா அவர்கள் கிரையம் வாங்க முயற்சித்து ராமச்சந்திரன் அதற்கு மறுத்தால் பிரேமலதா மற்றும் அவரது கணவர் மனோகரின் தூண்டுதலின் பெயரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-Father Vellai

Sd/-N.Renuga,
Addl. District Munsif,
Thirumangalam.